

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி CycloneFengal ஃபெஞ்சல் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கோட்டகுப்பம் நகராட்சியில் வனத்துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி மருத்துவ முகாம், காப்பகங்கள், பேரிடர் மேலாண்மை கட்டிடம் மற்றும் கடல் சீற்றங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அரசு அதிகாரிகளுடன் ஆலோசித்தார்.. மாவட்ட ஆட்சியர் சி பழனி, மாவட்ட எஸ்பி, தீபக்சுவாட்ச், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா .இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் , மாவட்டத் துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன், கோட்டகுப்பம் நகர மன்ற தலைவர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, ஒன்றிய செயலாளர் பி. கே.டி முரளி, மைதிலி ராஜேந்திரன், மீனவரணி மணி, மருத்துவரணி வினோ பாரதி, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு உள்ளிட்ட மாவட்ட, , ஒன்றிய, நகர, நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்...



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமையன்று, தி.மு.க மாநில மருத்துவர் அணி துணைசெயலாளர் டாக்டர் திலிப் ராஜகண்ணப்பன் ஏற்பாட்டில் மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் முகாமை துவக்கி வைத்தார். முன்னாள் அமைச்சர் மாவட்ட அவைத்தலைவர் சத்தியமூர்த்தி, மாநில விவசாய அணி துணைசெயலாளர் முருகவேல், ஒன்றிய செயலாளர்கள் பூபதிமணி, கோவிந்தராஜ், ஜெயபாலன், ஆறுமுகவேல், குலாம் முகைதீன், சண்முக நாதன், பொதுக்குழு உறுப்பினர் தனிக்கொடி, முதுகுளத்தூர் நகரச் செயலாளர் ஷாஜஹான் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மக்களுக்கான என்னுடைய போராட்டம் தொடங்கிவிட்டது!

# பா.ஜ.க.விற்கு எந்தவிதமான அரசியல் மரியாதையும் தெரியாது!

## வயநாடு தொகுதியில் நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் பிரியங்கா காந்தி பேச்சு!

திருவனந்தபுரம்,டிச. 2-

வயநாடு தொகுதியில் நேற்று நடைபெற்ற நன்றி அறிவிப்பு கூட்டத்தில் பிரியங்கா காந்தி எம்.பி. பேசினார். வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்ட பிரியங்கா காந்தி 4.10 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி



பெற்றார். நாடாளுமன்றத்தில் எம்.பி.யாக பொறுப்பேற்றார். இந்நிலையில் வயநாடு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக நேற்று முன்தினம் பிரியங்கா காந்தி வந்தார். அவருடன் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் வந்திருந்தார்.

மலப்புரம் மாவட்டத்தில்உள்ள முக்கம் பகுதியில் நடந்த நன்றி அறிவிப்பு கூட்டத்தில் பிரியங்கா காந்தி பேசியதாவது:

நீங்கள் எனக்கு அளித்த அன்பிற்கு நான் என்னுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வயநாடு மக்களுக்கான என்னுடைய போராட்டம் தொடங்கிவிட்டது. உங்களுக்கு என்னென்ன பிரச்சினைகள் உள்ளன என்பது குறித்து எனக்கு நன்றாகவே தெரியும். அவை அனைத்தையும் தீர்த்து வைப்பது தான் என்னுடைய முதல் கடமையாகும்.

பா.ஜ.வுக்கு எந்த அரசியல் மரியாதையும் தெரியாது. நாட்டில் தேர்தல் நடைமுறைகள் குறித்த நம்பிக்கை போய்விட்டது. நாட்டை நிலை நிறுத்தும் அடிப்படை அம்சங்களுக்காக நாம் போராட வேண்டும். வயநாடு தொகுதி மக்களுக்காகத் தான் நான் நாடாளுமன்றத்தில் உள்ளேன். இவ்வாறு அவர் பேசினார்.

இதன் பின்னர் ராகுல் காந்தி பேசியது: நாம் அனைவரும் அன்பைக் குறித்து பேசும்போது பா.ஜ. வெறுப்பு அரசியல் குறித்து பேசுகிறது. வயநாட்டில் பேரழிவு ஏற்பட்ட போதிலும் மக்களுக்கு எந்த உதவியும் செய்ய மோடி தயாராக இல்லை. இந்திய அரசியலமைப்பை காப்பாற்றுவதற்காகத் தான் நாம் போராடுகிறோம்.

எல்லா இந்தியர்களும் சமம் என்றுதான் அரசியலமைப்பு கூறுகிறது. ஆனால் அதானிக்கு மட்டும் தான் சிறப்பு உரிமை என்று மோடி கூறுகிறார். சி.பி.ஐ. உள்பட எல்லா விசாரணை அமைப்புகளும் அவர்களது கைகளில் உள்ளது. ஆனால் எங்களது கைகளில் மக்களின் இதயங்கள் உள்ளன. பா.ஜ.வின் கொள்கைகளை தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து மலப்புரம் மாவட்டத்தில் 2 இடங்களில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு கூட்டங்களில் இருவரும் கலந்து கொண்டு பேசினர். அதன் பின்னர் ராகுல் காந்தி டெல்லி புறப்பட்டு சென்றார். பிரியங்கா காந்தி நேற்றும் வயநாடு தொகுதியில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினார்.



சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. சார்பில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சிங்கம்புணரி அண்ணாமன்றத்தில் ரத்ததான முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் பூமிநாதன், பேரூராட்சி சேர்மன், அம்பல முத்து, துணை சேர்மன் இந்தியன், செந்தில், மு. சோமசுந்தரம், நகரச் செயலாளர் கதிர்வேல், அவைத் தலைவர் சிவகுமார், பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.புகழேந்தி, ஒன்றிய துணைச் செயலாளர் சேகர், பொருளாளர் பாஸ்கரன், குடோன்மணி, அலாவுதீன், மீனா, இளைஞரணி மனோகரன், அருண் பிரசாத், பிரேம்குமார், பொன் சரவணன், பரிஞ்சி சரவணன் கலந்து கொண்டனர்.

### மோடி ஆட்சியில்

# நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகமாக சரிகிறது!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச. 2-

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை வருமாறு:-

நடப்பாண்டின் ஜூலை செப்டம்பர் மாதத்திற்கான ஜி.டி.பி. (மொத்த உள்நாட்டு உற்பத்தி) புள்ளி விவரங்களை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது. அவை எதிர்பார்த்ததை விட மிக மோசமாக இருந்தன. இந்தியா, 5.4% பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்துள்ளது, நுகர்வு 6% ஆக அதிகரித்துள்ளது. ஜி.டி.பி. கடந்த 2 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்துள்ளது. ஆனால், உயிரியல் அல்லாத பிரதமரும், அவரது ஆதரவாளர்களும் இந்த மந்தநிலைக்கான காரணங்களை வேண்டுமென்றே கவனிக்காமல் கண்மூடித்தனமாக இருக்கிறார்கள்.

மும்பையைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஊதியம் 2019-2024க்கு இடையில் சரிவை கண்ட நிலையில், 20142023க்கு இடையில் எந்த வளர்ச்சியும் இல்லாமல் தேக்கமடைந்துள்ளது. விவசாய அமைச்சகத்தின் புள்ளிவிவரங்களை பார்க்கையில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சியில், விவசாயத் தொழிலாளர்களின் ஊதியம் ஒவ்வொரு ஆண்டும் 6.8% வளர்ச்சியடைந்தது. தற்போது மோடியின் ஆட்சியில், ஒவ்வொரு ஆண்டும் மைனஸ் 1.3% ஆக குறைந்துள்ளது.

இதே போல, செங்கல் சூளைத் தொழிலாளர்களின் ஊதியம் 2014-2022க்கு இடையில் குறைந்துள்ளது. இப்படி தொழிலாளர் வர்க்கத்தின் சம்பளம் உயராததால், நுகர்வு பாதிக்கப்பட்டு, நாட்டின் நடுத்தர மற்றும் நீண்ட கால பொருளாதார திறன் வேகமாக அழிந்து வருகிறது. இந்த கொடூரமான உண்மை இன்னும் எவ்வளவு காலம் புறக்கணிக்கப்படும்? ஆனால் பிரதமர் மோடியும், அவரது சகாக்களும் பெருமை பேசுவதில் மட்டுமே கவனம் செலுத்துகின்றனர். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம்.எஸ்.கே. ராஜேந்திரன்
டிசம்பர் 2 (1990)



தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்.

இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர்.

இராமநாதபுரம் நகர மக்களின் பேரன்பிற்கும் பெருமரியாதைக்கும் உரியவர்.

அன்பும் அடக்கமும் பண்பும் பணிவும் கொண்டவர்.

“இரக்கமற்ற சாவே! அடுக்குமா உனக்கு” எனக் கேட்டு தலைவர் கலைஞரை கண்ணீர் விடச் செய்தது இவரது மறைவு.

தலைமைக் கழகம்
தி.மு.க.

24-ஆம் ஆண்டு
நினைவு அஞ்சலி

வறுமையில் நேர்மை!
வளமையில் எளிமை!!

டிசம்பர் 02 2023



N.V.வீரய்யன் INA அவர்கள்
நகர தி.மு.க மு.அவைத் தலைவர்
நகரமன்ற மு.உறுப்பினர்
வர்த்தகர் சங்க மு.தலைவர்

...நீங்கா நினைவுகளுடன்...

வீரா.கணேசன் B.Com.,
நகர கழகச் செயலாளர்.
மன்னார்குடி.

வீரா.கதிரவன் M.A., M.L.,
மூத்த வழக்குரைஞர்.
அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்
உயர்நீதிமன்றம் - மதுரை.